# தமிழக வரலாற்றிற்கு மோடி ஆவணங்களின் பங்களிப்பு

(CONTRIBUTION OF MODI DOCUMENTS TO THE HISTORY OF TAMIL NADU)


இராக.விவேகானந்தகோபால்
மோடி வல்லுநர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர் - 9

## -: உள்ளுறை :-

1. முன்னுரை

2. மோடி எழுத்தின் தோற்றம்

3. தஞ்சை மோடி ஆவணங்கள்

3.1. தமிழ் வழக்கு
3.2. சரிபார்ப்புச் சான்று

4. அரசியல் வரலாறு

4.1. இசுலாமியர் படையெடுப்பு
4.2. மகால்களும் கானாக்களும்

5. சமுதாய வரலாறு

5.1. சமுதாய அமைப்பு
5.2. கல்விநிலை
5.3. மருத்துவம்

6. பொருளாதாரம்

7. மகளிர்நிலை

7.1. பலதார மணம்
7.2. உடன்கட்டை
7.3. பெண் குழந்தைகளை விற்றல்

8. சத்திரதர்மம்

9. சமயம்

10. காவல்துறை

11. நீதிமன்றங்கள்

11.1. தண்டனை முறைகள்

12. தமிழிலக்கிய வளர்ச்சி

13. நிறைவுரை

## சுருக்கெழுத்து விளக்கம்

| | | |
|---|---|---|
| சமமோத | - | சரசுவதி மகால் மோடித் தமிழாக்கத் தொகுதி (கையெழுத்துப்படிகள்) |
| 45 சி-32-1 | - | மோடி ஆவண மூட்டை என்னும், ஆவண என்னும் |
| க.என் | - | கல்வெட்டு என் |
| மோ.ப. | - | மோடிப் பலகணி |
| தொ.1, வ.எ.1 | - | சரசுவதி மகால் மோடி ஆவணத் தொகுதி 1 - வரிசை என் 1 (அச்சில்) |
| மோ.ஆ.க.க. | - | மோடி ஆவணக் கருத்தரங்கக் கட்டுரை |

## 1. முன்னுரை

தமிழக வரலாற்றைத் தெள்ளிதின் அறிய மூலச்சான்றுகளாக விளங்குபவை கல்வெட்டுக்கள், நாணயங்கள், செப்பேடுகள், சுவடிகள் ஆகியவைகளாகும். தமிழகத்தைப் பல்வேறு மன்னர்கள் பல்வேறு கால கட்டங்களில் ஆட்சி புரிந்தமையின் அவர்தம் ஆவணங்களும் பல்வேறு மொழிகளி-லமைந்தன. தமிழில் மட்டுமல்லாது சமஸ்கிருதம், மராட்டி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், பார்சி, பிரெஞ்சு, டச்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலை மற்றும் காகித ஆவணங்கள் உள. இவற்றைப் படித்து மொழிபெயர்த்தாலன்றித் தமிழக வரலாற்றினை முழுமையாக அறிய இயலாது. எனவே, தமிழக வரலாற்றிற்கு அடிப்படையாக அமையும் பிறமொழி ஆவணங்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பயன்படுத்தும் முயற்சியில்-மராட்டி மொழியிலமைந்த மோடி எழுத்து ஆவண மொழிபெயர்ப்பும் அடங்கும்.

கி.பி. 1676 முதல் 1855 வரை சுமார் 180 ஆண்டுக்காலம் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த மராட்டிய மன்னர்கள் தங்களது அரச ஆவணங்களைத் தாய்மொழியான மராட்டியில் 'மோடி' என்னும் ஒருவகை எழுத்தில் எழுதிவைத்துச் சென்றுள்ளனர். இவ்வாவணங்களில் தமிழக வரலாற்றின் ஒருபகுதியாகிய தஞ்சை மராட்டியரின் அரசியல், நிருவாகம், சமுதாயம், பொருளாதாரம், கலை, இலக்கியம், சமயம் சார்ந்த பல்வேறு செய்திகளும் நிரம்பிக் கிடக்கின்றன. எனினும் இவற்றை முறையாக மொழி பெயர்ப்பாரின்மையால், கிடைக்கும் அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்ய இயலவில்லை. இதுவரை மொழிபெயர்ப்பான ஆவணங்களின் துணைகொண்டு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், 'தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்', 'தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு' ஆகிய இருநூல்களை வெளியிட்டுள்ளதோடு மூல மோடி ஆவண மொழிபெயர்ப்பிணை

யும் மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. இவற்றின் அடிப்படையிலும் அச்சில் வராமல் கையெழுத்துப்படிவங்களாகச் சரசுவதி மகால் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள மொழிபெயர்ப்பு ஆவணங்களின் அடிப்படையிலும் இவ் ஆய்வுக் கட்டுரை வரையப்பட்டுள்ளது.

## 2. மோடி எழுத்தின் தோற்றம்

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் தேவகிரியை (தௌலதாபாத்) ஆண்ட யாதவ அரசர்களான இராமதேவராவ், மகாதேவராவ் ஆகியோரின் காலத்தில் அவர்கட்கு ஆவணக் காப்பக அலுவலராகப் பணிபுரிந்த 'ஹேமாதிரி பந்த்' அல்லது ஹேமாடுபந்த் (கி.பி. 1260-1309) என்பவர் ஆவணங்களை விரைவாக எழுதுவதற்காக 'மோடி' என்ற எழுத்து முறையை உருவாக்கினார். இதற்கு அடிப்படையாகத் தேவநாகரி வரிவடிவமே பயன்பட்டது. தேவநாகரி வரிவடிவத்தை உடைத்துச் சிதைத்து உருவாக்கிய புதிய எழுத்துமுறையே 'மோடி' ஆயிற்று என்பர் (p.351, Valambe, M.R. 1985).

சாதாரணமாக, இலக்கிய வடிவங்களை எழுதி வைப்பதற்குத் தேவநாகரி அல்லது 'பாலபோத்' எழுத்தைப் பயன்படுத்தினர். ஆனால், அரச ஆவணங்களை எழுதி வைப்பதற்கு மட்டும் இத்தகு மோடி எழுத்தைப் பயன்படுத்தியதால்,

1. விரைவாக எழுத முடிந்தது
2. செய்திகளை இரகசியமாகப் பாதுகாக்க முடிந்தது.

இத்தகு எழுத்தின் தேவையை ஹேமாடுபந்த் எங்ஙனம் உணர்ந்தாரெனில், "அவரது காலத்திற்குச் சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கு வந்த இசுலாமியர்கள் தங்களது 'பார்சி' மொழிக்கு இருவகையான எழுத்துக்களைப் பயன்படுத்தினர். 'நஸ்க' ( Naskha ) என்ற எழுத்துமுறை

தெளிவாகவும் மெதுவாகவும் எழுதப் பயன்பட்டது. அதேநேரத்தில் 'சிகஸ்த' ( Shikasta ) என்ற எழுத்துமுறை மிக விரைவாக எழுதப் பயன்பட்டது. இதனைக் கண்ணுற்ற ஹேமாடுபந்த் தேவநாகரி எழுத்தினை உடைத்துச் சிதைத்து விரைவாக எழுத வசதியாக மோடி எழுத்தினை உருவாக்கினார் எனலாம். 'சிகஸ்த' என்ற பார்சிச் சொல்லும் 'மோடி' என்ற மராட்டிச் சொல்லும் 'உடைந்த' என்ற ஒரே பொருளையே தருவதால் இவ்விருவகை வரிவடிவங்களும் ஒரே நோக்கத்திற்காகவே உருவாக்கப்பட்டவை என்பது விளங்கும் ( pp. 275-276, Padhye, K.A., 1931).

## 3. தஞ்சை மோடி ஆவணங்கள்

கி.பி. 13ஆம் நூற்றாண்டின் இடையிலிருந்து 20ஆம் நூற்றாண்டு வரை ஏறத்தாழ 750 ஆண்டுக்காலமாக வழக்கிலிருந்த மோடி எழுத்து, காலத்திற்கேற்ப மாறுதல்களை அடைந்துள்ளது. எழுதுபவர்களின் தன்மைக்கேற்பவும், எழுதப்படும் சூழலுக்கேற்பவும் இவ்வெழுத்து முறை சிற்சில மாறுதல்களுடன் மராட்டியர் ஆட்சி செய்த அனைத்துப் பகுதிகளிலும் வழக்கிலிருந்தது. கி.பி. 1676 முதல் 1855 வரை தஞ்சையை ஆட்சிசெய்த மராட்டிய மன்னர்கள் தங்களது தாய்நாட்டின் கொடையான மோடி எழுத்தினைத் தங்களது ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்தி, அரச ஆவணங்கள் அனைத்தையும் மோடியிலேயே எழுதி வைத்தனர். இதனை 'மராட்டிய அரச ஆவணங்கள்' (Maratha Raj Records ) என வழங்குவர்.

"தென்னிந்திய மோடி எழுத்து முறையானது மகாராட்டிர மோடி எழுத்து முறையைவிடச் சற்றே வேறுபட்டது. இந்தப் பழைய மோடியானது ( Archaic Modi ) வாசிப்பதற்கு எளிதானதல்ல. தென்னிந்திய மராட்டி மொழியும்கூடத் தமிழின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளது....." எனப்

பூனாவிலுள்ள பாரத இதிகாச சம்சோதக மண்டலின் தலைவரான பேராசிரியர் டி.வி.போட்தார் ( D.V.Potdar ) கூறியுள்ளார் (ப.7, எத்திராஜ், ஆ.ஜெ., 1983).

கி.பி. 1855ஆம் ஆண்டு மறைந்த இரண்டாம் சிவாஜிக்கு வாரிசு இன்மையால் தஞ்சை மராட்டியரின் அரசு முழுமையாக ஆங்கிலேயரின் வசமாயிற்று. அதை எதிர்த்துச் சிவாஜியின் பட்டத்தரசி காமாட்சியம்மா பாயி சாகேப் தனக்கு வாரிசுரிமை கேட்டு உயர்நீதி மன்றத்தில் முறையிட்டபோழ்து அரசு ஆவணங்கள் அனைத்தும் ஆங்கிலக் குடியிருப்பு ஆட்சியரின் ( Resident ) கைக்கீழ் வந்தன. இவற்றை ஆய்வு செய்யுமுகத்தான் சரசுவதி மகால் நூலகத்தின் மதிப்புறு செயலர் ஆணையராக நியமிக்கப்பட்டார். மோடி எழுத்திலிருந்த மராட்டிய ஆவணங்களை ஆய்வு செய்த அவர், அரச குடும்பத்தினருக்கு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கும், ஆய்வாளருக்கும் பயன்படும் வகையில் வரலாற்றுச் சிறப்புடையனவாக அவை விளங்குவதைக் கண்டு, அரச குடும்பத்தினரின் இசைவின் பேரில் அவ்வாவணங்களைச் சரசுவதி மகால் நூலகத்தில் வைத்துப் பாதுகாக்க நீதிமன்றத்தை வேண்டினார். அதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் அவ்வாறே மோடி ஆவணங்களைச் சரசுவதி மகால் நூலகத்தில் வைத்துப் பாதுகாக்க ஆணை பிறப்பித்தது (ப.4, ஆண்டறிக்கை 1926-27). எனவே கி.பி. 1927 முதல் மோடி ஆவணங்கள் சரசுவதி மகால் நூலகத்திற்கு மாற்றப்பட்டன.

தஞ்சையே மராட்டியர்களின் தலைநகரமாக விளங்கியதால் தஞ்சை அரண்மனையிலும், மராட்டியரின் ஆட்சி பரவிய இடங்களான கடலூர், திருச்சி ஆகிய இடங்களிலும், மராட்டிய அதிகாரிகள் தங்கிய இராமநாதபுரம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும், இவ்விடங்களிலிருந்து எடுத்துவரப்பட்ட ஆவணங்கள் சென்னையிலும் உள்ளன. தஞ்சையில் மட்டும் சுமார் 1000

மூட்டைகளில் மோடி ஆவணங்கள் கட்டி வைக்கப்பட்டுள்ளன.

மோடி ஆவணங்கள் கையினால் செய்யப்பட்ட காகிதத்தில் கடுக்காய் மையினால் எழுதப்பட்டிருக்கின்றன. ஆவணங்களைப் பலர் எழுதியதால் ஒவ்வொரு ஆவணமும் மாறுபட்ட கையெழுத்தைக் கொண்டுள்ளது. எனவே, ஒவ்வொரு கையெழுத்தையும் பரிச்சயப்படுத்திக் கொண்ட பின்னரே தெளிவாகப் படித்தறிய முடியும். இதற்குப் பயிற்சி அவசியம்.

## 3.1. தமிழ் வழக்கு

தமிழகத்திற்கு வந்த மராட்டிய மன்னர்கள் அவர்தம் காலத்தே இங்கு வழக்கிலிருந்த தமிழ், தெலுங்கு மொழிகளை அப்படியே ஏற்றுக்கொண்ட தன்மையினை அவர்தம் பயன்பாட்டிலிருந்து அறியலாம். தெலுங்கு எழுத்து அறிமுகமான காரணத்தால் அவ்வெழுத்திலேயே மராட்டி நாடகங்களை எழுதி வைத்துள்ளனர். அவ்வாறே மராட்டி மொழியிலமைந்த மோடி எழுத்து ஆவணங்களிலும் ஏராளமான தமிழ்ச் சொற்களைப் பெய்துள்ளமை ஈண்டு கருதத் தக்கது. இவ்வாறு பயன்படுத்தப்பட்ட தமிழ்ச் சொற்களை மூன்று பிரிவுகளாகக் கொள்ளலாம்.

1. வழக்குச் சொற்கள் – ஊழியம் பாழியம், வித்துமுதல், கண்டுமுதல்
2. தொழில்நுட்பச் சொற்கள்– கவலை, நாத்தங்கால், பள்ளியறை
3. மராட்டியாக்கச்சொற்கள்– மோட்யாதில் குப்பா, இருப்பாபைக்கி

இவ்வாறாக, மராட்டியர்தம் தாய்மொழி மராட்டியாக இருப்பினும், தமிழ்நாட்டுக்குக் குடிபெயர்ந்து வந்து, ஈண்டு தம் வாழ்வைத் தமிழ்நாட்டு மரபுக்கேற்ப மாற்றியமைத்துக் கொண்ட திறத்தினைக் காணமுடிகின்றது.

3.2. சரிபார்ப்புச் சான்று ( Cross Reference )

தஞ்சை மராட்டியர் காலக் கல்வெட்டுக்களிலும், செப்பேடு களிலும் குறிப்பிடப்பெறும் சில செய்திகள் மோடி ஆவணங்களிலும் காணப்படுவதால் இச் செய்திகளின் உண்மைத் தன்மையை அறியவும், காலத்தை அறுதியிடவும் மோடி ஆவணங்கள் பெரிதும் துணைநிற்கின்றன. எனவே இவற்றைச் சரிபார்ப்புச் சான்றுகள் எனலாம் (ப.22, விவேகானந்த கோபால், 1989).

சான்றாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். சர்ஜா மாடியில் கிடைத்த மராட்டிக் கல்வெட்டில் "கல்யாண மகாலின்மீது 12 அங்கணங்களைக் கொண்ட சர்ஜா மகாலும், 9 அங்கணங்களைக் கொண்ட சதர் மகாலும் கி.பி. 1823இல் சரபோஜியால் கட்டப்பட்டது" (மராட்டிக் கல்வெட்டு-வெளியாகாதது) என்ற செய்தி காணப்படுகிறது. இதே செய்தியைக் கி.பி. 1858இல் ஆங்கிலேயக் குடியிருப்பு ஆட்சியரான திரு சாரிசாகேப் சிரஸ்தேதார் வெங்கட்ராவிடம், 'அஞ்சு அங்கணத்தின் மாடியை யார் கட்டினது?' என வினா எழுப்பும்போது 'அந்த மாடியை சரபோஜி மகாராஜா கட்டினார்' என்று கூறுகிறார் (155 சி-13(6)).

வெண்ணாற்றுக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தில் காணப்படும் கல்வெட்டு "இப்பாலம் கி.பி. 1836ஆம் ஆண்டு இரண்டாம் சிவாசியினால்-லெப்டினென்ட் கர்னல் மக்லீன் குடியிருப்பு ஆட்சியராக இருந்தபோழ்து கட்டப்பட்டது" (க.எண்.68 இராசு,செ., 1987) என்ற செய்தியைக் கொண்டுள்ளது. இப்பாலம் பற்றிய மோடி ஆவணங்கள் நான்கு கிடைக்கின்றன. இப்பாலம் கட்ட வெண்ணாற்றுப் படுகையில் மண் எடுத்துச் செங்கல் அறுத்த செய்தியும் (78சி-3-1832), மரங்கள் கொடுத்ததன் செலவுக் கணக்கும் (199 சி-2-2-1834), இவ்வேலைக்காக மூங்கில், பனைமரங்கள் கொடுக்கப்பட்ட

செய்தியும் (190சி-32-1836), பின்னர் 1854ஆம் ஆண்டு பாலம் கட்டப் பட்டு வடக்கு வாசலுக்கும் இப்பாலத்திற்கும் சாலை போடப்பட்ட செய்தியும் (மோ.ப.22) கிடைக்கின்றன.

இவ்வாறே தஞ்சாவூர் வடவாற்றுப்பாலம் பற்றிய ஆவணங்களும், திருவையாறு காவிரிப் பாலத்திலுள்ள கல்வெட்டு தொடர்பான ஆவணங்களும் கிடைக்கின்றன (பக்.22-24 விவேகானந்த கோபால், 1989).

## 4. அரசியல் வரலாறு

சுமார் 180 ஆண்டுக்காலம் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் பதின்மூவர் பற்றிய செய்திகள் வரலாற்றாய்விற்கு அடிப்படையானவை. தஞ்சை நாடு கொள்ளிடத்தை வடக்கு எல்லையாகவும் திருச்சி, புதுக்கோட்டை-யை மேற்கு எல்லையாகவும், இராமநாதபுரம் ஆட்சிப்பகுதியைத் தெற்கு எல்லையாகவும், வங்காள விரிகுடாக்கடலைக் கிழக்கு எல்லையாகவும் கொண்டிருந்தது. இப்பகுதி 5 சுபாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது (சமமோத 20-16). சுபாவின் அலுவலர் சுபேதார் ஆவார் (ப.6, சுப்ரமணியன்,பா., 1989). இச் சுபாக்கள் பின்னர் 9 தாலுக்காக்களாகப் பிரிக்கப்பட்டன. அவை திருவாதி, கும்பகோணம், மாயவரம், பாபநாசம், திருவாரூர், நன்னிலம், சீவலூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை ஆகியன (105 சி-179-9).

நாட்டைப் பாதுகாக்க இராணுவம் இருந்தது. அதில் பல பதவி நிலைகள் உருவாக்கப்பட்டிருந்தன. பதக்நீஸ், காஸ்நீஸ், தஸ்து ர், ராயஸ்கார், ஹேறஜிப், சிட்னீஸ், உறஸன் மனேகார், நாட்கார், குளிகார், உறவால்தார், மேல் மனேகார், சீழ்மனேகார் போன்ற பதவிகள் இருந்தன (சமமோத 1-1).

இதுவரை மொழிபெயர்க்கப்பட்ட மோடி ஆவணங்களில் பிரதாப சிம்மன் காலம் முதல் இரண்டாம் சிவாஜியின் காலம் வரையிலான ஆவணங்களே கிடைக்கின்றன. கி.பி. 1739க்கு முந்தைய ஆவணங்கள் இதுவரை கிடைக்கவில்லை. பிரதாபசிம்மன் காலத்தில் மராட்டியருக்கும் புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையில் நிலவிய தொடர்பினை வெளிப்படுத்தும் பல ஆவணங்கள் கிடைக்கின்றன (தொ.1, வ.எ.1-11). அவ்வாறே, இராமநாதபுரம் சேதுபதிகளுடன் இரண்டாம் துளஜா போரிட்ட செய்திகளும் (மோ.ப.48), அதிராம்பட்டினத்து வியாபாரியை இராமநாதபுரம் தாலுக்காவின் மணியக்காரர் பிடித்து வைத்துக் கொண்ட செய்தியும் (1-147-149) இவர்களுக்கிடையிலான அரசியல் தொடர்பைப் புலப்படுத்துவன.

4.1. இசுலாமியர் படையெடுப்பு

ஆர்க்காட்டு நவாப் தஞ்சையைக் கைப்பற்றும் எண்ணத்துடன் ஆங்கிலேய அதிகாரிகளைத் தன்வசப்படுத்திக் கொண்டு 1771 செப்டம்பர் மாதம் தனது மூத்த மகன் உமதத் உல் உமாராவும், ஜெனரல் ஸ்மித்தும் தலைமை தாங்கப் படையெடுத்து வந்தார் (3-177). எதிரிகளின் தாக்குதலைச் சமாளிக்க இயலாத துளஜா உடன்படிக்கை செய்து கொண்டார். இதன்படி இரண்டு ஆண்டுகளுக்குரிய பேஷ்குஷ் எட்டுலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது (3-142). மராட்டிய மன்னர் தொகையை முறைப்படிச் செலுத்தி வந்தாலும், நவாப் முகம்மது அலிகான் தஞ்சையைக் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்தில் இங்கிலாந்து அரசின் ஒப்புதல் இல்லாமலேயே கும்பினியினரைச் சரிக்கட்டிக் கொண்டு தஞ்சைமேல் படையெடுத்தார். இப்போரில் ஜெனரல் ஸ்மித் கோட்டையைப் பிடிக்க 17.2.1773 முதல் 11.4.1776 வரை சுமார் மூன்றாண்டுக்காலம் தஞ்சை நவாபின் ஆட்சியிலிருந்தது. இங்கிலாந்து அரசுக்கு இச்செய்தி தெரியவந்ததும் இரண்டாம் துளஜாவை மீண்டும் அரசராக்குமாறு பணித்தனர். துளஜா மீண்டும் அரசரானார் (6-193).

இவை தவிர, இரண்டாம் சரபோஜி ஆட்சிக்கு வருவதற்குத் தடையாக இருந்த அமர்சிங் பின்னர் எப்படிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, சரபோஜி திபதவியில் அமர்த்தப்பட்டார் என்ற செய்திகளும் மோடி ஆவணங் களில் உள (923 சி-9-50). இதேபோன்று இரண்டாம் சிவாஜி இறந்த பின்பு அரசியாயிருந்த காமாட்சியம்மா பாயிசாஉேறப் தனக்கு அரசுரிமை வேண்டுமென வழக்குத் தொடுத்த செய்திகளும் இவ்வாவணங்களில் இடம் பெற்றுள்ளன (37 சி-55(சி).

## 4.2. மகால்களும் கானாக்களும்

அரசனுக்கு ஆட்சிபுரிய உதவியாக அமைந்த துறைகள் மகால்களும் கானாக்களும் ஆகும். 'பன்னிரு மகால்கள், பதினெண் கானாக்கள்' என்பது மரபு (5-380). எனினும், இப்பன்னிரு மகால்களும், பதினெண் கானாக் களும் இடத்திற்கு இடம் காலத்திற்குக் காலம் மாறுபடுகின்றன. மோடி ஆவணங்களில் கூறப்படும் வகைப்பாட்டின்படித் துணி, நகைக்கருவூலம், குளிர் பானம் தயாரிக்குமிடம், ஆயுதப் பராமரிப்புச் சாலை, யானைப் பராமரிப்பு இடம், தண்ணீர்ப்பந்தல், வெடிமருந்துக் கிடங்கு, சாராயம் போன்ற மது பானங்கள் தயாரிக்குமிடம், டமாரம் போன்ற கருவிகள் பேணும் இடம், உடற்பயிற்சிக்கூடம், பீரங்கிக்கூடம், பயிர்த்தொழில் மேற்பார்வைக்கூடம், மருத்துவமனை, சேமிப்புக்கிடங்கு, ஆவண அலுவலகம், பாத்திர பண்டங்கள் செய்யுமிடம், வரி பெறும் அலுவலகம், தலைப்பாகை முதலியன பேணுமிடம், காசுக்கடை ஆகியன பதினெண் கானாக்களில் அடங்கும்.

கருவூலம், குதிரைலாயம், தையல்கூடம், தண்ணீர்ப்பந்தல், தானியக்கிடங்கு, மாட்டுப்பண்ணை, பல்லக்குக்கூடம், சமையல்கூடம், மராமத்து அலுவலகம், தங்கசாலை, தூதுவர்துறை, நெற்களஞ்சியம் ஆகியவை பன்னிரு மகால்களாகும். இவை ஒவ்வொன்றிற்கும் 'முக்கியகார்பாரி' என்ற மேற்பார்வை அலுவலர் இருப்பார். இத்துறைகளின்வழி அரசர் நிருவாகத்தைத் திறம்பட நடத்தினார்.

## 5. சமுதாய வரலாறு

தஞ்சை நாட்டின் சமுதாய அமைப்பும் அதன் வரலாறும் பற்றிய செய்திகள் மோடி ஆவணங்களில் ஏராளமாகக் கிடைக்கின்றன. இவற்றை ஒட்டுமொத்தமாகத் தொகுத்துக் காணின் 18,19ஆம் நூற்றாண்டுகளில் தஞ்சைப் பகுதியின் சமுதாய வரலாறு தெளிவாகத் தெரியும். ஈண்டு மொழி பெயர்க்கப்பட்ட ஆவணங்களின்வழி சமுதாய வரலாறு பற்றிய பார்வை கொடுக்கப்படுகிறது.

### 5.1. சமுதாய அமைப்பு

சமுதாய அமைப்பில், சாதிகளை இருபெரும் பிரிவுகளாகப் பிரித்து வலங்கையினர், இடங்கையினர் என அழைத்தனர். இவர்களுக்குள் பூசல் ஏற்படும்போதெல்லாம் அரசர் தலையிட்டுத் தீர்த்து வைத்ததாகப் பல ஆவணங்கள் கிடைக்கின்றன.

'இடங்கை வலங்கைச் சாதியார் வரலாறு' என்ற மெக்கன்சி சுவடியின் படி (ஆர்.1572; டி.2751) வலங்கைச் சாதியார் 98; இடங்கைச் சாதியார் 98 என்றவாறு பிரிக்கப்பட்டிருந்தனர். ஆனால் புதுக் கோட்டைப் பகுதியில் வலங்கை 24 சாதிகளும், இடங்கை 9 சாதிகளுமே வாழ்ந்தனர் (8-5).

இவர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவு என்னவெனில், 'எந்தவிதமாகப் பந்தல் போட்டு வாகனப் பிருதுகளுடன் கலியாணம் செய்து ஊர்கோலம் வருவது' என்பதே (8-2). இதற்குத் தஞ்சை அரசன், இருவரும் சமாதானமாகப் போகுமாறு விதிமுறைகளை வகுத்து அனுப்புகின்றான் (8-7 முதல் 12 வரை).

### 5.2. கல்விநிலை

மராட்டிய மன்னர்கள் கல்விக்காகப் பல ஏற்பாடுகளைச் செய்து

இருந்தமை மோடி ஆவணங்களின் வழி விளங்கும். கோட்டைக்குள் அமைந்திருந்த 'நவவித்யா கலாநிதி சாலா' என்ற பள்ளியில் பல்வகைப் பாடங்களும் சொல்லித் தரப்பட்டன (31சி-2-42).

சோழர்களுக்குப் பின்னர்த் தஞ்சையை நாயக்கர், இசுலாமியர் ஆகியோர் ஆட்சி செய்ததால் தமிழோடு தெலுங்கு, இந்துஸ்தானி, பார்சி, அராபிய மொழிகளும், ஆங்கிலேயர் வரவால் ஆங்கிலமும் மராட்டியர்களின் தாய்மொழியான மராட்டியும் இப் பள்ளியில் கற்பிக்கப்பட்டன. தவிர, வேதம், தத்துவம், இலக்கணம், காவியம், நாடகம், அலங்காரம், இசை, சிற்பம், மருத்துவம், சோதிடம் ஆகிய பாடங்களும் பயிற்றுவிக்கப்பட்டன.

ஏட்டுக்கல்வி மட்டுமன்றி, கவாத்து (களப்பயிற்சி), கழிபட்டை (மற்போர்), குதிரை ஏற்றம் முதலியனவும் சொல்லித்தரப்பட்டன (104 சி-61).

தமிழ் மட்டும் சொல்லித்தரக் கோட்டையின் நான்கு வீதிகளிலும் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் இருந்தன (160 சி-23). இப் பள்ளிகளுக்கு அரசர் அவ்வப்போது நல்கை வழங்கி வந்தார். ஆடிப் பதினெட்டாம் பெருக்கிற்குப் பிள்ளைகள் ஆசிரியருக்குக் காசு கொடுப்பது வழக்கம். அக் காசினை அரசர் பிள்ளைகளுக்குக் கொடுத்து வந்ததோடு, பூசைக்காகவும் பணம் வழங்கியுள்ளார் (111 சி-43). அதைப்போலவே தைப் பொங்கலுக்காகத் தேங்காய், பழம், கரும்பு, பரங்கிக்காய், பூசணிக்காய் முதலியன வழங்கித் தமிழ் படிப்போரை ஊக்குவித்தமை புலப்படும் (179 சி-5-3).

## 5.3. மருத்துவம்

'நவவித்யா கலாநிதி சாலா'வில் சாத்திரீய (ஆயுர்வேதம்), தமிழ் (சித்த), ஆங்கில (அலோபதி), யுனானி மருத்துவ முறைகள் சொல்லித்

தரப்பட்டதாக மோடி ஆவணம் ஒன்று கூறுகிறது (104 சி-61). இந் நான்கு வகை வைத்திய முறைகளை நடைமுறைப்படுத்தத் 'தன்வந்திரி மகால்' என்ற மருத்துவ நிலையம் இருந்தது. இதைத்தவிர, 'சர்க்கார் ஆரோக்கிய சாலை' என்ற மருத்துவமனையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப் பட்டிருந்தது (138 சி-4-2). இங்குப் பலதரப்பட்ட மருத்துவர்கள் இருந் தனர். முக்கிய மருத்துவர், குழந்தை மருத்துவர், கண் மருத்துவர், விஷ மருத்துவர் (138 சி-67), பெண் மருத்துவர் (170 சி-29-4) என இவர்கள் தத்தம் துறையில் சிறப்புப் பெற்றிருந்தனர்.

மானுட மருத்துவத்துடன் கால்நடை மருத்துவம் செய்வதற்கும் மருத்துவர்கள் இருந்தனர் (138 சி-67), ஆடு, மாடு, கோழி, நாய், யானை, குதிரை, ஒட்டகம், சிறுத்தை, கரடி ஆகிய விலங்குகளுக்கு மருத்துவம் செய்யப்பட்ட செய்திகள் மோடி ஆவணங்களில் பரவலாகக் கிடைக்கின்றன.

## 6. பொருளாதாரம்

அரசுக்கு எவ்வெவ்வழிகளில் வருவாய் கிடைத்தது என்பதைப் பற்றிய ஆவணங்கள் பல கிடைக்கின்றன. முக்கிய வருவாயாக உழவரின் நிலத்தினின்று கிடைக்கும் நெல் மேல்வாரமாகவும், மிராசுதாரர்கள் மூலமாக வசூலிக்கும் பணமுமாகவே இருந்தது (181 சி-7; 137 சி-13). இதுமட்டுமன்றி உப்பளங்கள் மூலமாக உப்பு வருமானமும் (சமமோத 6-39), பருத்தி, பட்டு நெசவுக்குத் தறி வரி (179 சி-13-2), புன்செய் நிலப்பயிர் வரி, கொடிக்கால் வரி, நவராத்திரி வரி, தீபாவளி வரி, சங்கராந்தி வரி முதலானவைகளும் (சமமோத 28-6), முத்திரைப் பத்திரம் விற்பதால் கிடைக்கும் வருவாயும் (சமமோத 7-24), மீன் குத்தகை (சமமோத

23-46), சாராயக் குத்தகை (சமமோத 5-24; 2-35), அகழிக் குத்தகை (31 சி-14-30) முதலியவற்றின் மூலமும், ஓடத்தீர்வை, கடைத் தீர்வை (சமமோத 29-31; 15-28) ஆகியவையும், சுங்கவசூல் மூலமும் (சமமோத 5-25) முத்துக்குளித்தல் மூலமும் (2-120,212) அரசுக்கு வருமானம் வந்து கொண்டிருந்தது.

இனி நாணயப் புழக்கத்தினைப் பார்க்குமிடத்துப் புலிவராகன், சக்கரம், பணம், காசு ஆகியவை பயன்பாட்டிலிருந்தன.

| | | |
|---|---|---|
| 32 காசு | - | 1 பணம் |
| 2½ பணம் | - | 1 சென்னப்பட்டணம் வெள்ளிப்பணம் |
| 4 வெள்ளிப்பணம்(அ)10 பணம் | - | 1 சக்கரம் |
| 4½ சக்கரம் (அ) 45 பணம் | - | 1 புலிவராகன் |

தவிரப் பிறபகுதிகளில் புழக்கத்திலிருந்த நாணயங்களுக்கு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு அவையும் மராட்டியர் ஆட்சியில் பயன்படுத்தப்பட்டன என்பதற்கான சான்றுகளாகப் பல ஆவணங்கள் கிடைக்கின்றன.

மேலும் இரண்டாம் சரபோஜி பல வகையான நாணயங்களைக் கல்யாண மகாலில் சேர்த்து வைத்திருந்தார் என்று ஓர் ஆவணம் குறிப்பிடும். அதில் சுமார் 125 வகையான நாணயங்களின் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன (86 சி-13).

அளவைகளைப் பார்க்கும்போது முகத்தலளவையாக மரக்காலும், எடுத்தலளவையாகத் தோலா, பலம், சேர், வீசை, மணங்கு, கழஞ்சு ஆகியவையும் நீட்டலளவையாகச் சான், முழம், முதலிய அளவுகளும், நில அளவாக 14 அடிக்கோலும் வழக்கத்திலிருந்தன (பக்.164-166, வேங்கட ராமையா,கே.எம்., 1984).

## 7. மகளிர் நிலை

மராட்டியர் கால மகளிர் நிலை பற்றிப் பேசுமிடத்து, அவர்தம் ஆட்சிக்காலத்தில் தஞ்சை நாட்டில் வாழ்ந்த பல்வேறு இன, மொழி மகளிரின் நிலை எவ்வாறு இருந்தது என்பது பற்றிய செய்திகள் மோடி ஆவணங்களின்வழி அறியக்கிடக்கின்றன. இதுவே ஒரு தனி ஆய்வாக அமையலாம்.

மேல்நிலை இன மகளிர் கல்வி, கலைகளில் சிறந்திருந்தனர். அரண்மனை வளாகத்திலிருந்த 'நவவித்யா கலாநிதி சாலா' என்ற கல்விக் கூடத்தில் மகளிரும் ஆசிரியராக இருந்தனர் என்ற செய்தியே இதற்கு வலு வூட்டும் (சி-123-13-10-1811; சி-170-29-1-1858) மகளிர் கலைகளில் தேர்ந்திருந்தனர். தேவதாசியர் ஆடல், பாடல், கருவி இசை போன்றவற்றில் ஈடுபட்டிருந்தனர் (சி.184-21-6-1813) அரச மகளிரும் வீணை முதலிய இசைக்கருவிகளை மீட்டக் கற்றுக்கொண்டனர் (சி.54-1-7-1852).

அரண்மனை தேவத்தானத்தின் மேற்பார்வையிலிருந்த கோயில்களில் தேவதாசிகள் நியமிக்கப்பட்டனர் (சமமோத 22-24). இவர்களுக்குப் பாட்டும் ஆட்டமும் சொல்லித்தரப்பட்டன. கோயில்கள் பெரும்பாலும் அரசிய ராலேயே பராமரிக்கப்பட்டன என்பது ஒரு சிறப்பான செய்தியாகும். அரசியர் பெயராலேயே கோயில் கட்டுமானப்பணி, திருப்பணி, பூசைகள் முதலியன நடைபெற்றன (சமமோத 1-19,20).

### 7.1. பலதார மணம்

அன்றைய காலகட்டத்தில், பல மகளிரை மணம் புரிந்துகொள்ளும் வழக்கம் காணப்பட்டதை மராட்டியரின் மோடி ஆவணங்கள் சுட்டிக் காட்டு கின்றன. மன்னர்கள், தம்முடைய ஆட்சியின் கீழுள்ள பல பிரிவுகளை ஒருங் கிணைத்துத் தம்முடைய வலுவை அதிகரித்துக் கொள்வதற்காக இத்தகு மணங்களைப்

புரிந்து கொண்டனர். செல்வந்தர்கள் செல்வச் செழுமையாலும், சமுதாயத்தில் பெரிய இடத்தில் இருந்ததாலும் பலதார மணம் புரிந்தனர். எனினும், சாதாரணக் குடியானவரும் பலதார மணம் புரிந்ததை மன்னன் தடுக்கவில்லை; மாறாகப் பொருளுதவி செய்துள்ளான் (சமமோத 1-4).

## 7.2. உடன்கட்டை

கணவன் இறந்தபடின் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கம் மராட்டியரின் காலத்திலும் நடைமுறையிலிருந்தது. கி.பி. 1728 முதல் 1829 வரை அரச மகளிர் மட்டுமல்லாது குடிமக்களும் உடன்கட்டை ஏறிய பல செய்திகளை மோடி ஆவணங்களின் வழி அறியமுடிகின்றது. இவ்வுடன்கட்டை ஏறிய செய்திகளுள் பெரும்பான்மையோர் பார்ப்பனராகவும் சிறுபான்மையோர் வணிகராகவும் உள்ளனர். உடன்கட்டை ஏறும் நிகழ்ச்சிக்காக அரசன் அன்பளிப்பு வழங்கிய செய்திகளும் காணக்கிடைக்கின்றன (சமமோத 13-10-29; 10-24; 5-261; 20-8; 6-34).

## 7.3. பெண் குழந்தைகளை விற்றல்

பெண் குழந்தைகள் விற்கப்பட்ட நிலையும் மராட்டியர் ஆட்சியில் இருந்தது. இதற்கான காரணங்களாவன :

1. வறுமையின் கொடுமையால் குழந்தையை வளர்க்க இயலாத பெற்றோர் பெண் குழந்தையை விற்றனர்.
2. தேவதாசியர் பெண் குழந்தைகளை விலைக்கு வாங்கி அவர்களைத் தம் வாரிசாக்கப் பயிற்சியளித்தனர்.
3. அரண்மனையிலும், செல்வந்தர் இல்லங்களிலும் பணிப் பெண்டிரை விலைக்கு வாங்கினர்.
4. இசுலாமியரும், கிறித்தவரும் பெண் குழந்தைகளை விலைக்கு வாங்கித் தத்தம் மதத்திற்கு மதமாற்றம் செய்து கொண்டனர்.

199354

V21193:81'M55 ← K76
N96

இவற்றைச் சுட்டிக்காட்டும் மோடி ஆவணங்கள் அன்றையச் சமுதாய நிலையைப் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைகின்றன (மோ.ப. ஆ.என் 74,75; சமமோத 2-16; 6-46).

## 8. சத்திர தர்மம்

சத்திர தர்மங்கள் மராட்டிய அரசியரின் பெயராலேயே நடைபெற்று வந்தன. மொத்தத்தில் 20 சத்திரங்கள் இருந்ததாகப் பேசப்பட்டதாலும் அவற்றுள் 13 மகளிர் பெயரிலேயே அமைந்திருந்ததைக் காணலாம் (923 சி-63).

முதலாம் துளஜாவின் மனைவி பெயரில் அமைந்த இராசகுமாரபாயி சத்திரமே (1728) மிகப் பழமையானதாகும். இது சூரக்கோட்டையில் இருந்தது. பின்னர், பிரதாபசிம்மன் காலத்தில் சக்குவாரம்பா சத்திரம் (திருபுவனம்), யமுனாம்பா சத்திரம் (நீடாமங்கலம்), திரௌபதாம்பா சத்திரம் (மணமேற்குடி) ஆகியவையும், இரண்டாம் துளஜாவின் காலத்தில் இராசகுமாரம்பா சத்திரம் (மீனமேசல்), மோகனாம்பா சத்திரம் (இராசாமடம்), இராசசாம்பா சத்திரம் (தாராசுரம்), சுலக்சணாம்பா சத்திரம் (வேளங்குளம்), உமாபாயி சத்திரம் (மகாதேவ பட்டணம்) ஆகியவையும் இரண்டாம் சரபோஜியின் காலத்தில் முக்தாம்பாள் சத்திரமும் (ஒரத்தநாடு), இரண்டாம் சிவாஜியின் காலத்தில் சைதம்பா சத்திரம் (சூரக்கோட்டை), அகல்யாபாயி சத்திரம் (மல்லியம்), பஞ்சநத மோகனாம்பா சத்திரம் (திருவையாறு) ஆகியவையும் உருவாக்கப்பட்டன.

சத்திர தர்மம் எவ்வாறு நடைபெற வேண்டும் என விதிமுறைகள் வகுக்கப்பட்டிருந்தன. கதியற்றவன், சம்பாதிக்கச் சக்தியற்றவன், பரதேசி ஆகியோருக்கும், வழிப்போக்கர், குருடர், முடவர், அங்கஉறீனர், கிழவர்,

குழந்தை ஆகியோருக்கும் சத்திரத்தில் இலவச உணவும், உறைவிடமும் கொடுக்கப்படலாம். இவர்களைத் தவிர்த்து, அரசாங்க அலுவலர் அல்லது ஆங்கிலேய அலுவலர் யாராவது வந்தால் அவர்களது தகுதிக்கேற்பச் சிறப்பு உணவு வழங்கலாம். பெரிய அதிகாரிகள் அந்தணர், பைராகிகள், பெரியோர் ஆகியவர்களுக்கு உலுப்பைகள் வழங்கலாம். உலுப்பையாவது, அரிசியும் அதனை உணவாக்குவதற்குரிய பிற பொருள்களுமாம். இவ்வுலுப்பையில் முதல்தரம், இரண்டாம்தரம் எனவும் உண்டு.

சத்திரத்தின் அலுவலர், ஆள் ஒருவரும் சத்திரத்தில் சாப்பிடக் கூடாது; அல்லது சத்திரத்திலிருந்து பொருள்கள் எதுவும் எடுத்துச் செல்லக் கூடாது. அவ்வாறு ஏதாவது நடந்தால் அவரைக் கண்டிக்க வேண்டியது என்ற குறிப்பும் இவ்வாவணத்திலேயே சுட்டப்பட்டுள்ளது.

வழிப்போக்கர் யாரேனும் நோயுற்று, சத்திரத்தை நாடினால் அவருக்குச் சத்திரத்தின் மருத்துவரைக் கொண்டு மருத்துவம் செய்து, குணமாக்கி அனுப்புவது எனவும் சொல்லப்பட்டிருக்கிறது (923 சி-9-62).

முக்தாம்பாள் சத்திரம், சிரேயஸ் சத்திரம் போன்றவற்றில் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்களும் இருந்தன. இவை தங்கிப் படிக்கும் பள்ளிக் கூடங்களாகும் (47 சி-39; 912 சி-42-31).

## 9. சமயம்

மராட்டிய மன்னர்கள் சிவபக்தர்களாக இருந்தபோதிலும், ஸ்ரீ வைணவக் கோயில்களையும் பராமரித்துப் போற்றத் தவறியதில்லை. இவர்களது பராமரிப்பில் 64 கோயில்கள் இருந்ததாக ஆவணமொன்று கூறுகிறது (10-93; 94,95). இவற்றுள் சைவ, வைணவ, அம்மன் கோயில்களும் உள.

மராட்டிய மன்னர்களின் காலத்தில் புதியனவாகக் கட்டப்பெற்ற சில கோயில்களும் உள. கோட்டைக்கு வெளியே வெண்ணாற்றங்கரையில் நீலமேகப் பெருமாள், மணிகுண்டப்பெருமாள், மேலசிங்கப்பெருமாள் ஆகியவை புதிதாக எடுப்பிக்கப்பட்டவை எனலாம் (2-290,291; 4-293).

தவிரப் பல கோயில்களுக்கு மானியம் நிலமாகவும், பணமாகவும் கொடுக்கப்பட்டது. இவற்றுள் கிறித்தவர்களும், இசுலாமியரும் விதிவிலக்கல்லர்.

இரண்டாம் சரபோஜி சுவார்ட்ஸ் பாதிரியாரிடம் கல்வி பயின்றமையின் அவரிடத்து அன்பு கொண்டு அவர் படுத்தபடுக்கையாக இருந்தபோது அவரைத்தான் பார்ப்பது போன்ற ஒரு பளிங்குப் படிமத்தைத் தஞ்சாவூர் சுவார்ட்ஸ் மாதா கோயிலில் அமைத்தார் (ப.211, வேங்கடராமையா, கே.எம்.,1984). தவிர, தரங்கம்பாடியில் இருந்த மேஸ்தர் ஜீயான் பாதிரி நடத்திவந்த ஆங்கிலப்பள்ளிக்கு மாதம் 20 புலிஉறான்னம் கொடுத்து வந்தார் (சமமோத 18-34). கோட்டையிலிருந்த பாதிரியாருக்கு மாதம் 100 கலம் நெல்லும், மாயூரத்திலிருந்த பர்ன்குடிக் என்பவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ 200/-உம் கொடுக்கப்பட்டது (114 சி-119; 160 சி-91).

இசுலாமியரும் மராட்டியர் ஆட்சியில் சிறப்பாகப் போற்றப்பட்டனர். பிரதாபசிங்கர் கி.பி. 1740இல் நாகூருக்குச் செல்லும் வழியில் வடயாரங்குடிக்கு அருகில் 'பாவாசாகேப்பின் தர்க்கா'வுக்கு தீபாநகரப் பேட்டை சுங்கத்தினின்று ஒரு காசு வீதம் அளிக்க உத்தரவிட்டார் (சமமோத 14-45). துளஜா கி.பி. 1776இல் மகம்மது ஷேக் ஷ்என்பவருக்கு மன்னார்குடிக்குச் செல்லும் வழியில் 12 அடிக்கோலால் 2 வேலி நிலம் இனாம் கொடுத்தார் (5-302,303). கி.பி. 1776இல் துளஜா

தங்கத்திலும் வெள்ளியிலும் ஆக 34 அல்லாக்களும், தங்கக்குடைகள் இரண்டும் செய்தார் என்றொரு ஆவணம் குறிப்பிடுகிறது (113 சி-21-2). அவ்வாறே, கி.பி. 1773இல் மல்லியம் சாஉேறப் என்பார் கடைவீதியில் கோட்டையின் பக்கம் ஒரு மசூதி கட்டினார். இம் மசூதியை நடத்துவதற்கும் பக்கீர்களுக்கு உணவளிக்கவும் சாலியமங்கலம் வட்டத்தில் கடதம்பட்டு என்ற ஊரில் 10,229 குழிகளும், வல்லார்பட்டு என்ற ஊரில் 2419 குழிகளும் அளிக்கப்பட்டன. அங்கு 'முகமதுபுரம்' என்ற ஊர் அமைக்கப்பட்டது(சமமோத 14-43).

இவ்வாறாக இந்துக்களுக்கு மட்டுமன்றிக் கிறித்தவர், இசுலாமியர், சைனர் ஆகியோருக்கும் கொடை, நிலம், பணம் முதலியன அளித்துப் போற்றியமையால், மராட்டியர் சமயப்பொறை மிக்கவர் என்பது புலனாகிறது.

## 10. காவல்துறை

கோட்டைக் காவலதிகாரியாக இருந்தவர் 'கொத்தவால்' என அழைக்கப்படுவார் (31 சி-58). இவர் நகரில் நடக்கும் குற்றங்களைக் கண்டுபிடித்துத் தண்டனைக்காக நீதிமன்றங்களுக்கு அனுப்பும் பணியையும், நகரின் அமைதிக்கான பணியையும் செய்ய வேண்டியவர். மட்டுமன்றி நகர்ப் பராமரிப்பும் இவரது பணியாகும். இவரது பொறுப்பில் காவலர்கள் இருந்தனர். 2-12-1856ஆம் நாளிட்ட ஆவணமொன்று கொத்தவால் நடந்துகொள்ள வேண்டிய முறைபற்றிக் கூறுகிறது (125 சி-34-1). இதன்படி,

1. கொத்தவால் ஒரு சேவகனுக்கு 15 நாட்களின் சம்பளம் வரையில் அபராதம் விதிக்கலாம்.
2. திருடியவனிடத்தில் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு திருடியவனையும் பிராது கொடுத்தவனையும் நீதிபதியிடம் அனுப்பவேண்டும்.

3. தானாக்காரனைக் கொத்தவால் மாற்றினால் காரணம் கூறவேண்டும்.

4. நகரத்தைத் தூய்மையாக வைத்திருக்க நகர சுத்தி மகால்தாரர்களைப் பணிக்கவேண்டும்; அதற்குரிய வண்டிகளும் மூப்புரவாளர்களும் கொத்தவாலின் வசம் இருக்கவேண்டும்.

5. கோட்டைக்கு வெளியே வயனின் தூய்மை கெடாமல் பாதுகாக்க வேண்டும். தூய்மையைக் கெடுப்பவரை நீதிபதியிடம் கொண்டுவந்து நிறுத்தவேண்டும்.

6. திருட்டு நடக்காமல் இருக்க எச்சரிக்கை செய்ய வேண்டும்.

7. சூதாட்டத்தைத் தடை செய்வது கொத்தவாலின் கடமை.

## 11. நீதிமன்றங்கள்

இரண்டாம் சரபோஜியின் காலத்திற்கு முந்தைய நீதிமன்றங்கள் பற்றிய செய்திகள் மொழிபெயர்க்கப்பட்ட மோடி ஆவணங்களில் பெரிதும் காணப்படவில்லை. ஆருப்பினும் இரண்டாம் சரபோஜியின் காலத்தில் நால்வகை நீதிமன்றங்கள் இருந்தன. அவை முத்திரித சபை, தரும சபை, நியாய சபை, நியாயாதீச சபை என்பன (2சி-16-32).

முத்திரித சபையில் 100 ரூபாய்க்குள் அமையும் சிறிய வழக்குகளும், தர்ம சபையில் 100 ரூபாய்க்கு மேற்பட்டு வரும் வழக்குகளும் தீர்க்கப்பட்டன (14 சி-17-1). நியாய சபையில் தீர்க்கப்பட்ட குற்றவியல் வழக்கு ஒன்று மேல் முறையீட்டிற்காகத் தரும சபையிலும், மீண்டும் மேல் முறையீட்டிற்காக நியாயாதீச சபையிலும் கொடுக்கப்பட்டதாக ஓர் ஆவணம் கூறுகிறது (34 சி-209). அதைப்போலவே, தரும சபையில்

மேல்முறையீடு செய்யாமல் நியாயாதீச சபையில் முறையீடு செய்யக்கூடாது என்றும் காணப்படுகிறது (ஆ.எ.117). எனவே குற்றவியல் வழக்குகளைத் தீர்க்க நியாய சபையும், தரும சபை வழியாக நியாயாதீச சபையும் இருந்தன எனக் கொள்ளலாம். நியாயாதீச சபையார் சரசுவதி மகாலில் உள்ளவர்கள் கூறும் தர்மசாத்திரப் விதிப்படித் தீர்ப்புச் சொல்லலாம்.

பிரதிஷ்டித சபை என்பது கோட்டைக்கு வெளியே உள்ள வழக்கு களைத் தீர்ப்பதற்கானதாகும். இஃதினின்று மேல்முறையீடு செய்ய வேண்டு மாயின், கார்பார் பிரசங்கத்தில் செய்யலாம். கார்பார் பிரசங்கம் சர்க்கேலின் மேற்பார்வையில் இயங்குவது (34 சி-139).

## 11.1. தண்டனை முறைகள்

சிறைத்தண்டனை, அபராதம் விதித்தல், பிரம்படி கொடுத்தல், எச்சில் இலை சுமத்தல் ஆகியவை தண்டனை முறைகளாகும். சிறைத்தண்டனை விதிக்கப்படின், தண்டனைக் காலம் முடியும்வரை காலில் விலங்கிட்டு மராமத்து வேலைகளைச் செய்யப் பணிக்கப்பட்டனர். தண்டனைக்காலம் முடிந்ததும் தண்டோரா போட்டு, நான்கு வீதிகளிலும் குற்றவாளியை அழைத்து வந்து, முழங்காலுக்குக் கீழே பிரம்படி கொடுத்து விடுவித்தனர் (115 சி-46-1; 179 சி-21-4).

## 12. தமிழிலக்கிய வளர்ச்சி

மோடி ஆவண மூட்டை 6இல் சரசுவதி மகால் நூலகத்திலுள்ள ஓலை மற்றும் காகிதச் சுவடிகளின் பட்டியல் உள்ளது. இதிலிருந்து அக்காலத் தில் இருந்த தமிழ் நூல்கள் எவை எவை, யாரால் எழுதப்பட்டன என்ற விவரங்களை அறிந்து கொள்ளலாம். மராட்டிய மன்னர்கள் தாய்மொழியால்

மாறுபட்டிருப்பினும், தாங்கள் ஆட்சி செய்த பகுதி மக்களின் மொழியையும், இலக்கியத்தையும் போற்றிக் காத்ததோடு அதன் வளர்ச்சியிலும் பெரும்பங்கு கொண்டிருந்தனர் என்பதை இதன்வழி அறியலாம்.

ஏகோஜி அல்லது வெங்கோஜியின் மகனான சகசி இலக்கிய ஆர்வ மிக்கவர். அவரே 'காவேரி கல்யாண நாடகம்' எனும் தமிழ் நாடக நூலைத் தெலுங்கு எழுத்தில் எழுதியுள்ளார் (12-193-டி.2429). இவரது காலத்தில் இவரைச் சிறப்பித்து எழுதிய சில நூல்களும் காணப்படுகின்றன. 'விஷ்ணு சாகராச விலாசம்' எனும் நூலாகும் இது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை (12-288-டி.2372). முத்துக்கவிராயர் இயற்றிய 'குற வஞ்சி நாடகம்' தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது (12-290-டி.2394). 'சந்திரிகா காச விலாசம்', 'பூலோக தேவேந்திர விலாசம்', 'தியா கேசர் குறவஞ்சி' ஆகியவையும் இவரைச் சிறப்பித்துப் பாடுவன (12-292-டி.2417; 12-169; 12-29-டி.2441). இவை தவிர, சங்கர நாராயண விலாசம் (12-287-டி.2368), கும்பகோணப் புராணம், வாசுதேவ கவி, இராமபாரதி ஆகியோரின் சிருங்காரப் பதங்கள் முதலியனவும் சகசி காலத்திய பிற இலக்கியங்களாகும் (மோ.ஆ.க.க.6).

முதலாம் சரபோஜி காலத்தில் 'சிவ ரகசியம்' என்ற நூலை ஒப்பிலாமணிப் புலவர் இயற்ற, 'மிழலைச் சதகம்' சருக்கரைப் புலவரால் இயற்றப்பட்டது (மோ.ஆ.க.க.6).

இரண்டாம் துளஜாவின் காலத்தில் சீர்காழி அருணாசலக்கவிராயர் 'இராம நாடகக் கீர்த்தனை'யை இயற்றி அதற்காகத் துளஜாவிடம் பரிசில் பெற்றுள்ளார் (சமமோத 48-23).

இரண்டாம் சரபோஜியின் காலத்தில் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் புகழ்பெற்ற கவிஞராக விளங்கினார். இவர் கோடீச்சுரக்கோவை,

தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் ஆகிய நூல்களை இயற்றியதோடு 'சரபேந்திர வைத்திய முறைகள்' என்ற மருத்துவ நூல் வரிசைகளையும் சரபோசிக்காக எழுதிக் கொடுத்தார் (12-293).

இன்னும் மோடி ஆவணங்களின்வழி கிடைக்காத பல தமிழ் இலக்கியங்கள் தஞ்சை மராட்டியரின் காலத்தே உருவாகித் தமிழன்னைக்கு அணி சேர்த்தன எனின் மிகையன்று.

## 13. நிறைவுரை

தமிழக வரலாற்றின் ஒருபகுதியாகிய தஞ்சை வளநாட்டின் வரலாற்றைத் துலக்கமுற அறிதற்குச் சோழர், நாயக்க மன்னர்களின் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் உறுதுணை புரிவது போன்றே தஞ்சை மராட்டியரின் அரசியல், சமுதாயம், கல்வி, மகளிர்நிலை, பொருளாதாரம், நிர்வாகம் ஆகியவற்றை அறிவதற்கும் தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சியினைக் காண்பதற்கும் மராட்டியர்தம் அகச்சான்றாகத் திகழும் மோடி ஆவணங்கள் அவசியமானவை என்பதனை இக்கட்டுரை நிறுவுகிறது.

எனவே, தமிழகமெங்கும் பரவலாகக் கிடைக்கின்ற மோடி ஆவணங்களை ஓரிடத்துத் தொகுத்து அவற்றை முறைப்படுத்தி, மொழிபெயர்த்துத் தொகுதிகளாக வெளியிடின், தமிழக வரலாற்றின் துலங்காப் பகுதிகளை நிறைவு செய்ய இயலும். இதற்கான முயற்சியைத் தமிழக அரசு தொடங்கியிருக்கிறது. அதன்படித் தமிழகத்தின் எல்லா ஆவணக் காப்பகங்களிலும் முடங்கிக் கிடக்கும் மோடி ஆவணங்களைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிட ஆணையிட்டுள்ளது. இம்முயற்சி வெற்றி பெறின் தஞ்சையில் சிறந்ததோர் 'மோடி ஆவண ஆய்வு மையம்' அமைவது உறுதி.